கணக்கெடுப்பின்படி *1,32,375.* எனவே, *30,000* மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் பார்த்தால்கூட, அங்கு இருக்கிற நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களும் அந்தப் பகுதி மக்களுக்கு சுகாதாரத் தேவை அளிக்கக்கூடியனவாக இருக்கின்றன. இருந்தாலும், இப்போது சமீபத்தில் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், அங்கே கூடுதலாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டிய தேவை இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, புதியதாக ஆரம்ப சுகாதார நிலையங்களை அதிக அளவில் உருவாக்கி, அவற்றை குறைபாடுகளோடு நடத்தி, அதிருப்தியை சம்பாதிப்பதைவிட, இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களை இன்னும் தரம் உயர்த்தி, சிறப்பான மருத்துவ சேவையை செய்வதற்கு திட்டமிட்டு இன்றைக்கு செயலாற்றி வருகிறது. அதற்காக இந்த அரசு நபார்டு வங்கி, உலக வங்கியினுடைய உதவிகளை நாடியுள்ளது. அதுவும் குறிப்பாக சொல்லப்போனால், முதன்முதலாக நபார்டு வங்கி சுகாதாரத் துறைக்கு, அதுவும் தமிழகத்திற்கு மட்டுமே கடனுதவி தர முன்வந்திருப்பது, நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முயற்சியால்தான். எனவே, இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சீர்படுத்திவிட்டு, பின்னர் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் தகுதியான இடங்களில், ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து இந்த அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 8, திரு. இரா. திருமாவளவன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

8—

நுகர்பொருள் வாணிபக் கிடங்கு

***23379—திரு. இரா. திருமாவளவன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதி, திட்டக்குடியிலுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கிற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புரட்சித் தலைவியினுடைய இந்த அரசு, தமிழ்நாட்டில், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் கடனுதவியுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 40 வட்டங்களில் செயல்முறை கிடங்குகள் கட்ட திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தில் கடலூர் மாவட்டம், மங்களூர் தொகுதிக்குட்பட்ட திட்டக்குடியும் இடம் பெற்றுள்ளது. எனவே, திட்டக்குடி வட்டத்தில் கிடங்கு கட்டத் தகுதியான நிலம் கிடைக்கப்பெற்றபின் நிதி வசதிக்கேற்ப கிடங்கு கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

9—

முத்திரைத்தாள்

***9858—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி, அம்பத்தூர் ஆகிய தொழிற்பேட்டைகளில் உள்ள சிறுதொழில் முனைவோர்கள், முத்திரைத்தாள் அதிக விலைக்கு வாங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தொழிற்பேட்டை இடங்களுக்கு முத்திரைத்தாள் விலக்கு அளிக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் உள்ள சிறுதொழில் முனைவோர்கள் அதிக விலைக்கு முத்திரைத்தாள் வாங்குவதில்லை.